இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 16-11-2025

# பா.ஜ.க. கால பயங்கரப் பட்டியல்!

பத்து ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியானது மக்களை எப்படிப் பாதுகாத்துள்ளது என்பதற்கான பட்டியல் ஊடகங்களில் வெளியாகி உள்ளது.

**“இந்தியாவில் ஆண்மை உள்ள பிரதமர் இல்லாததால் தான் வெடிகுண்டுகள் வெடிக்கிறது. வெளிநாடுகளில் இருந்து தீவிரவாதிகள் உள்ளே நுழைகிறார்கள்” என்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பரப்புரை செய்து ஆட்சிக்கு வந்தார் மாண்புமிகு மோடி. அவரது ஆட்சியின் பயங்கர சாதனைப் பட்டியலைப் பாருங்கள்...**

2014 ஆம் ஆண்டு மோடி பிரதமர் ஆனது முதல் இந்தியாவில் இதுவரை நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள்:

★ டிச.28, 2014- பெங்களூரு தேவாலயத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் - ஒருவர் பலி, 5 பேர் காயம்.

★ மார்ச் 20, 2015- காஷ்மீர் பள்ளியில் குண்டுவெடிப்பு- 6 பேர் பலி, 10 பேர் காயம்.

★ ஜுலை 27, 2015- குருதாஸ்பூர் போலீஸ் சோதனைச்சாவடி தாக்குதல்-10 பேர் பலி, 15 பேர் காயம்.

★ ஜன 2, 2016- பதன்கோட் விமானப்படை தாக்குதல்-7 பேர் பலி

★ ஜுன் 25, 2016- பாம்பூர் சி.ஆர்.பி.எப். வீரர்களின் வாகனங்கள் மீது தாக்குதல் 8 பேர் பலி, 22 பேர் காயம்.

★ செப். 18, 2016- உரி ராணுவ முகாம் தாக்குதல்- 23 பேர் பலி

★ அக்.3, 2016- பாரமுல்லா தாக்குதல்

★ அக்6, 2016- ஹந்த்வாரா ராணுவ தளத் தாக்குதல்

★ நவ. 29, 2016- நக்ரோட்டா ராணுவத் தளத் தாக்குதல்-10 பேர் பலி

★ ஏப். 24, 2017 சுக்மா நக்சலைட் தாக்குதல்-26 சி.ஆர்.பி.எப். வீரர்கள் பலி.

★ மார்ச் 7, 2017- போபால் - உஜ்ஜைன் ரெயில் குண்டுவெடிப்பு- 10 பேர் பலி

★ ஜுலை 11, 2017- அமர்நாத் யாத்திரை படுகொலை- 8 பேர் பலி

★ பிப்.10, 2018- சுஞ்சுவான் ராணுவத் தளத் தாக்குதல் -11 பேர் பலி

★ மார்ச் 13, 2018-சுக்மா குண்டுவெடிப்பு- 9 பேர் பலி

★ பிப்.14, 2019-புல்வாமா சி.ஆர்.பி.எப் வாகனங்கள் மீதான தற்கொலைப் படைத் தாக்குதலில் 40 வீரர்கள் பலி

★ மார்ச் 7, 2019-ஜம்மு பஸ் நிலையம் கையெறிக் குண்டு தாக்குதல்- 3 பேர் பலி, 30 பேர் காயம்.

★ ஏப். 9, 2019- தண்டேவாடா தாக்குதல்-5 பேர் பலி

★ மே 1, 2019 - கட்சிரோலி வெடிகுண்டு தாக்குதல்-16 பேர் பலி

★ ஜுன் 12, 2019- அனந்த்நாக் தாக்குதல்-5 சி.ஆர்.பி.எப் வீரர்கள் பலி

★ ஏப். 3, 2021-சுக்மா-பிஜாப்பூர் தாக்குதல்- 22 ராணுவ வீரர்கள் பலி

★ ஜுன் 27, 2021-ஜம்மு விமானப்படை தளம் மீதான தாக்குதல்

★ ஆக. 27, 2021-அசாம் ரயில் தண்டவாளத்தில் குண்டு வெப்பு

★ ஜன. 1,2, 2023- ரஜவுரி தாக்குதல்கள் - 7 பேர் பலி

★ ஏப்.8, 2023-எலத்தூர் ரெயில் தீவைப்பு-3 பேர் பலி

★ ஏப். 26, 2023- தண்டேவாடா குண்டுவெடிப்பு-10 போலீசார் உட்பட 11 பேர் பலி

★ அக். 29, 2023-கொச்சி கிறிஸ்தவ கூட்டத்தில் தாக்குதல் - 3 பேர் பலி, 36 பேர் காயம்.

★ மார்ச் 1, 2024- பெங்களூரு கபே குண்டுவெடிப்பு- 9 பேர் காயம்

★ ஜுன் 9, 2024- ரியாசி பஸ் தாக்குதல்- 9 பேர் பலி, 41 பேர் காயம்.

★ அக்.20, 2024- ககாங்கீர் தாக்குதல்- ஒரு டாக்டர் உள்பட 7 பேர் பலி

★ மார்ச் 28, 2025- கதுவா தாக்குதல்- 4 போலீசார் சாவு

★ ஏப், 22, 2025- பஹல்காம் தாக்குதல் - 26 பேர் சாவு

★ நவ.10, 2025- டெல்லி செங்கோட்டைத் தாக்குதல்-13 பேர் பலி, 30 பேர் காயம்.

- இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டியது யார்? பிரதமரும், உள்துறை அமைச்சரும் அல்லவா?

டெல்லி செங்கோட்டைப் பகுதியில் கடந்த 10 ஆம் தேதியன்று நடந்த குண்டுவெடிப்பில் அதிகளவில் அமோனியம் நைட்ரேட் பயன்படுத்தப் பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட அமோனியம் நைட்ரேட் வேதிப் பொருளை குற்றவாளிகள் அதிகளவில் கொள்முதல் செய்தது எப்படி? அதனை சேமித்து வைத்தது எப்படி?

கார் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக ஜம்மு காஷ்மீர், அரியானா, உத்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் காவல் துறையினர் மேற்கொண்ட சோதனையில் 2,900 கிலோ வெடி மருந்தைக்கைப்பற்றிஇருக்கிறார்கள். அத்துடன்ஏ.கே.ரகதுப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றி இருக்கிறார்கள். 2,900 கிலோ வெடிமருந்து இவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறது?

45 விழுக்காட்டுக்கு மேல் அமோனியம் நைட்ரேட்டைக் கொண்ட ரசாயனங்களை வெடிபொருட்கள் என ஒன்றிய அரசு 2011 ஆம் ஆண்டு அறிவித்தது. இந்தவேதிப்பொருளைஇறக்குமதிசெய்யகடும்கட்டுப்பாடுகளை 2015 ஆம் ஆண்டு அரசு விதித்தது. ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் தடையில்லாமல் கிடைக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

**“டெல்லியில் நடைபெற்றது தேச விரோத சக்திகள் இழைத்த பயங்கரவாதச் செயல்” என்று ஒன்றிய அமைச்சரவைக் குழுக் கூட்டம் சொல்லி இருக்கிறது. 11 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கிற பா.ஜ.க., இத்தகைய தேசவிரோதச் செயல்களை ஏன் தடுக்கவில்லை? தடுக்க முடியவில்லை?**

**பயங்கரப் பட்டியலை மெடல்களாகத் தயாரித்து மாட்டிக் கொள்ளப் போகிறார்களா பா.ஜ.க. ஆட்சியாளர்கள்?**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) கொளத்தூர், ஜவஹர் நகரில் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி” என்ற தலைப்பில் கொளத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு, கழக வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 3.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை, பெரியமேடு சார்பதிவாளர் அலுவலக புதிய கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 16-

2023-2024 ஆண்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில், மிகவும் பழமை வாய்ந்த சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, சென்னை எழும்பூர், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் வேப்பேரி உள்ளிட்ட 4.86 சதுர கிலோ மீட்டர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பத்திர பதிவு சேவைகள் வழங்கி வரும் பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 3.86 கோடி ரூபாய் செலவில் 6,200 சதுரஅடி நிலப்பரப்பில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இப்புதிய கட்டடம், மொத்தம் 7,323 சதுர அடி கட்டட பரப்பளவில், வாகன நிறுத்துமிடம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழிவறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மின் தூக்கி, குளிர்சாதன அறைகள், இணைய சேவை, சிறு நூலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

## அகவிலைப்படி உயர்த்தி அறிவிப்பு!

# முதல்வருக்கு அரசு அலுவலர்கள் - ஆசிரியர்கள் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

*சென்னை, நவ. 16 -*

***அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்ததற்கு பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.***

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.11.2025 அன்று அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவிகிதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.*

*இந்த அகவிலைப்படி உயர்வால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.*

*அகவிலைப்படி உயர்வை அறிவித்ததையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.11.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், ஜே.எஸ்.ஆர். தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, நர்சுகள் பொதுநல சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம்,*

*தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் ஒன்றியம், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம், நேரடி நியமனம் பெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழில் கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு அரசு தேர்வு துறை பணியாளர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு நெட் செட் பிஎச்டி ஆசிரியர்கள் சங்கம், தீபம்,*

*டாக்டர் இராதா கிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு வட்டாரக் கல்வி அலுவலர் முன்னேற்றச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் நலச் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.*

*இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.*

## உங்கள் அனைவரையும்

# பரந்த பார்வையும், பகுத்தறிவும் கொண்ட உலகக் குடிமக்களாக வளர்த்தெடுப்பேன்!

## குழந்தைகள் நாளையொட்டி – முதல்வர் மு.க,ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ.16-

குழந்தைகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “தமிழ்நாட்டுக் குழந்தைகள் அனைவரையும் பரந்த பார்வையும், பகுத்தறிவும் கொண்ட உலகக் குடிமக்களாக வளர்த்தெடுப்பேன்” என்று சூளுரைத்துள்ளார்.




முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**தமிழ்நாட்டின் குழந்தைகள் நலமாகப் பிறக்க மகப்பேறு நிதியுதவி, பிறந்ததும் வளமாக வளர ‘ஊட்டச்சத்தை உறுதிசெய்’,**

**வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் நிலையிலும் சத்தான உணவைப் பெறக் காலை உணவுத் திட்டம்,**

**பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு அன்புக்கரங்கள்,**

**உயர்கல்விக்கு உதவ ‘நான் முதல்வன்’, ‘புதுமைப்பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’,**

**ஒட்டுமொத்த நலனை உறுதிசெய்யத் ‘தமிழ்நாடு மாநிலக் குழந்தைகளுக்கான கொள்கை 2021’ எனக் குழந்தைகளின் மீது தாயன்பு காட்டி, உங்கள் கனவுகளுக்கெல்லாம் துணை நிற்கும் ‘திராவிட மாடல்’ அரசின் சார்பில் எனது குழந்தைகள் நாள் நல்வாழ்த்துகள்!**

**உங்களின் ஒவ்வொரு அடியிலும் உங்களுடன் நிற்பேன், நீங்கள் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொள்வேன், உங்களின் வெற்றியைக் கண்டு மகிழ்வேன், உங்கள் அனைவரையும் பரந்த பார்வையும், பகுத்தறிவும் கொண்ட உலகக் குடிமக்களாக வளர்த்தெடுப்பேன்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.